
# ஆத்மஜோதி



ஸ்ரீ இ. வா. ஐ. அவர்கள்.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.


You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

ஓர் ஆத்மீக மாத வெளியீடு.






எல்லா உலகிற்கும்
இறைவன் ஒருவன்
எல்லா உடலும்
இறைவன் ஆலயமே.

-சுத்தானந்தர்

ஜோதி 18 | பராபவ ஸ்ரீ புரட்டாதி மீ 1உ [17-9-66] | சுடர் 11

# பொருளடக்கம்


| | |
|---|---|
| வாழ்த்துப் பா மாலை | 321 |
| பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்த பெரியார் | 323 |
| கபீர் அருள் வாக்கு | 327 |
| கந்தர் அநுபூதி | 328 |
| அன்பின் உருவம் - கி. வா. ஜ. | 329 |
| ஸ்ரீ ஆண்டாள் அருள் விருந்து | 334 |
| படாத காலிலும் படும் | 343 |
| தமிழ்ச் செல்வா, வருகவே! | 347 |
| பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகளுடன் இருபது நாட்கள் | 348 |
| ஸ்ரீ அரவிந்தரின் அதிமானச தத்துவம் | 350 |


## ஆத்மஜோதி சந்தா விபரம்

*ஆயுள் சந்தா:-* 100.00 — *வருடச் சந்தா:-* 3.00
*தனிப்பிரதி சதம்:-* 30.

*கௌரவ ஆசிரியர்*
திரு. க. இராமச்சந்திரா

*பதிப்பாசிரியர்*
திரு. நா. முத்தையா

"ஆத்மஜோதி நிலையம்" *நாவலப்பிட்டி.* (சிலோன்)

*போன்:-* 353.

செந்தமிழ்ச் செல்வர் - கலைமகள் ஆசிரியர்

# ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன்

அவர்களுக்கு

நாவலப்பிட்டியில் 26-8-66 இல் மணிவிழா எடுத்தபோது

ஆத்மஜோதி நிலையத்தினரால்

வாசித்தளிக்கப்பெற்ற

# வாழ்த்துப் பா மாலை

கொண்டைக் குடுமி வைதிகமாக்
குலவுங் கருத்து நவீனமதாக்
கோலப் பழமை புதுமையொடு
குழைக்குஞ் சமர்த்தன் வருக!உயர்
பண்டைத் தமிழ்தேர் பண்டிதர்கள்
பழகு தமிழ்க்கும் பாமரர்கள்
பண்டைத் தமிழ்க்கும் அருவருத்த
பயிர்ப்பைக் கெடுத்துத் தம்மிலவர்
அண்டிப் பயன்பெற் றுர்வமுற
ஆக்கப் பணிசெய் தவன்வருக!
அன்னை தமிழ்க்கோ ரகவிளக்காம்
ஆர்வப்புதல்வ வருக! இனி
எண்டிக் கினிலுந் தமிழேற
ஈடார் மேடை யெலாமேறும்
இன்சொற் கொண்டல் வருக! என்றும்
இளையோய் வருக! வருகவே!!

ஓரா யிரமாண் டுளமொருக்கி
உருக்குந் தவத்தால் தமிழன்னை
உலக முவப்பப் பயந்தெடுத்தே
உ.வே. சாமி நாதையப்
பேரா தரித்துப் பேணுமகன்
பிரியத் தரியான் பேழ்கணித்தும்
பேர னொருவன் தனக்குளனும்
பேறு கண்டு மகிழ்சிறப்பால்
ஆராக் காதல் தலைக்கொள்ள
அகில மனைத்துந் திரிந்து திரிந்
தார்வங் கூரக் குதுகலித்திட்
டங்கங் கணைகை யினைநீட்டி
வாராய் மகனே யெனவவள்தன்
வன்னக் கரத்துட் குழைந்தணையும்
வாழ்வே வருக! ஜகந்நாத
வள்ளால் வருக! வருகவே! 2

வேறு

மேதைக் கலையொலி விஞ்சு தமிழ்க்கடல்!
வேகக் கவிபொழி வியன்மேகம்!
விண்ணவ ரமுதமும் வேண்டல னெனுமொரு
வீறுடு தமிழ்நல(ம்) நுகர்சாமி
நாதக் கலைமுகில் நம்முன(ம்) மின்னிய
நலமிகு சௌதா மணிமின்னே!
நாமத் தமிழினி ஞாலத்திடை புகழ்
நாடற் கிதுவழி யெனவாங்கே
போதச் சிறுகதை பொலிதிரு மூறைமலர்
புதுமைகொள் கந்த ரலங்காரப்
பொற்புறு சொற்பொழி வாதிய தந்தொரு
புதுவழி போற்றிய தமிழொளியே
வேதப் பெருநல மிகுஜகந் நாதன்!
வீறுடு வாழிய பல்லாண்டே!
மிகுதமிழ் நாவலர் பாவலர் மேன்மை
விளங்கிட வாழிய பல்லாண்டே! 3

(யாத்தவர்: வித்துவான். மு. கந்தையா அவர்கள், ஏழா

# பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்த பெரியார்

(ஆசிரியர்)

தமிழ்நூல் கற்ற எவரும் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்களை அறியாமல் இருக்க முடியாது. அவர்களை அறியாதார் தமிழை அறியாதாரே. இத்தகைய பெருமகனுக்கு உத்தம மாணுக்கராக இருந்தவர்கள் பிரம்மஸ்ரீ கி. வா. ஜகந்நாதஐயர் அவர்கள். இவர் திருச்சி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணராயபுரம் என்னும் திருப்பதியில் 1906 ஆம் ஆண்டு 11ஆம் நாள் அவதரித்தார். கல்லூரிப் படிப்பு முடித்தபின் 22ஆவது வயதில் ஐயர் அவர்களிடம் தமிழ் கற்க ஆரம்பித்தார்கள். ஐயர் அவரிடம் தமிழ் அமுதத்தை மாந்தி தாம் பெற்ற இன்பம் மற்றையோர்களும் பெறச் செய்தார்கள் என்று சொல்வதே பொருந்தும்.

ஐயர் அவர்கள் தமிழ்ப்பணி செய்தார்கள் என்றால் அதற்கு அச்சாணியாக இருந்தவர்கள் கி.வா.ஜ. என்றே கூறலாம். ஏடுகளைப் பிரதி பண்ணுதல், ஒப்பு நோக்குதல் முதலாம் கருமங்களில் உறுதுணையாக இருந்து பெருந்தொண்டாற்றினார்கள். கி. வா. ஜ. அவர்கள் இலக்கியத் துறையில் தொடாத பொருள் இல்லை என்றே சொல்லலாம். நாள் ஒன்றுக்கு ஒரு நூல் எழுதும் வல்லமை படைத்தவர்கள். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு நூல் என்றால் எல்லார்க்கும் ஒரு பயம். செய்யுளை வாசித்தால் விளங்காது, அவற்றுக்கு அமைந்த உரைகளோ செய்யுளை விட மிகக் கடினம். இந்த இலட்சணத்திலே சங்க நூல் என்றால் அவற்றை நாம் இப்பிறப்பிலே படித்து அறிய முடியாத ஒன்று என்று பலரும் கருதி இருந்தார்கள்.

கி. வா. ஜ. அவர்கள் சங்க நூற் காட்சிகளை எழுதத் தொடங்கினார்கள். வெறுப்புக் கொண்டிருந்தவர்கள் சங்க இலக்கியங்களை விரும்பிப் படிக்கத் தொடங்கினார்கள். பயப்படாதீர்கள் என்றொரு புத்தகம் எழுதினார்கள். பயந்திருந்தவர்கள் எல்லாரும் அதைப் படித்தபின் தமிழ் படிக்கவும் பேசவும் தைரியமாக முன்வந்தார்கள்.

நாவலர் ஐயாவினுடைய இலக்கணச் சுருக்கம் படித்து, நன்னூல் காண்டிகையுரை படித்து, நன்னூல் விருத்தியுரை படித்து தொல்காப்பியம் படித்தல் மரபு. தொல்காப்பியம் என்று சொன்னாலே ஒரு பயம். இப்படி ஒரு காலம். கி,வா.ஜ. அவர்கள் தொல்காப்பியத்தை இலக்கண நூலாகப் பாராது தமிழர்வாழ்வு என்ற முறையிலே சில பிரசங்கங்களைச் செய்தார்கள். அப் பிரசங்கங்களை 'ஹனுமான்' என்ற பத்திரிகையிலே வாரந்தோறும் எழுதி வந்தார்கள். இதைப் படித்தவர்கள் மனதிலே தொல்காப்பியத்தைப் பற்றியிருந்த பயம் நீங்கியது.

திருமுறைகள் என்றால் அது ஓதுவார்களுக்குத்தான் சொந்தமானது. பொதுமக்கள் படிக்கமுடியாதது என்றொரு காலம் இருந்தது. யாரும் மனந் துணிந்து திருமுறைப் பாடல்களுக்கு உரை எழுதுவதே கிடையாது. அங்ஙனம் யாராவது உரை எழுதினாலும் அச் செயல் பெரிய பாதகமாகக் கருதப்பட்டது. திரு. கி.வா.ஜ. அவர்கள் திருமுறை மலர்கள் எழுதத் தொடங்கினார்கள். பன்னிரண்டு திருமுறைகளுக்கும் பன்னிரண்டு திருமுறை மலர்கள் வெளிவந்தன திருமுறைகளை விரும்பிக் கற்போர் தொகை பெருகியது.

சிறுகதைப் பாணியிலே செய்யுட் பொருட்களை விளக்கிச் செல்லும் வகை அவர்களுக்கே அமைந்ததொரு தனிச் சொத்தாகும்.

'நம்பு பாமாலையாலே நரருக்கின்றமுதம் ஈந்தான்

என்று கம்பன் பாவைப் புலவர் ஒருவர் பாராட்டியுள்ளார் இதே கருத்து திரு. கி. வா. ஜ. அவர்களுக்கும் நூற்றுக்கு நூறு பொருத்தமாகும். அவர்களுடைய எழுத்திலே அன்பு ஊறும்; அருள் பெருகும்; பக்தி மணக்கும். அவர்களுடைய எழுத்தில் புதுமை பொலியும். பழமையைப் புதுமையாக்கி பொதுமக்களை யெல்லாம் பழமைக்கு அழைத்துச் சென்று பழமைக்கும் புதுமைக்கும் பாலம் போல அமைந்தவர்களாவர். இலக்கியங்களைத் தமிழ்க் கண் கொண்டு பார்ப்பவர்களும், இருக்கின்றார்கள். பக்திக் கண் கொண்டு பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். எக் கண் கொண்டு பார்த்தாலும் இவர்களுடைய எழுத்தைக் கண்டு அதில் தமது மனதைப் பறி கொடுக்காதவர்கள் இல்லை என்றே கூறலாம்.

உ. வே. சாமிநாத ஐயர் அவர்களால் தொடங்கப்

பெற்ற கலைமகள் பத்திரிகைக்குக் கடந்த கால் நூற்றாண்டாக ஆசிரியராக அமர்ந்து தமிழ்த் தொண்டாற்றி வருபவர்கள் கி. வா. ஜ. அவர்கள். இலக்கியம், சிறுகதை, சமயம் ஆகிய எல்லாத் துறைகளிலுமே சிறந்து விளங்குவதை அறியலாம். மஞ்சரியில் வரும் கட்டுரைகள் கொண்டு அவரது பன்மொழிப் புலமையும் பலகலை அறிவும் விளங்குக் கிடக்கின்றன. அவர்களுடைய ஆராய்ச்சித் திறனை விளக்க திருக்குறள் உரை வளம் ஒன்றே போதியது. இதுவரை அவருடைய பெயரால் 120 நூல்களுக்கு மேல் வெளிவந்துள்ளன. இவரது சிறுகதைகள் 11 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இவரது தமிழ்த் தொண்டிலும் தமிழ் இனிமையிலும் தமது உள்ளத்தைப் பறிகொடுத்த மகான்களும் சங்கங்களும் இவரைப் பாராட்டு முகமாகப் பல பட்டங்களைக் கொடுத்துள்ளனர். திருமுருகாற்றுப்படை அரசு, வாகீச கலாநிதி, தமிழ்க்கவி பூஷணம், செந்தமிழ்ச் செல்வர், திருநெறித் தவமணி, தமிழ்ப் பெரும் புலவர். இப் பட்டங்களைத் தவிரச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'வித்துவான்' எம். ஏ. என்ற பட்டங்களையும் பெற்றவர்கள். இவ்வளவு பட்டங்களைப் பெற்றிருந்தும் அவர்கள் இப் பட்டங்களைக் கூறுவதனால் பெருமை கொள்வதில்லை. தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ளவர்களுக்கும் கி.வா.ஜ. என்றாலே இவ்வளவு பட்டங்களும் பெருமையும் அவர்களது உள்ளத்தில் தெற்றெனப் புலப்படும்.

எழுத்துத்துறையில் எத்தகைய வல்லுனரோ பேச்சுத் துறையிலும் அத்தகைய வல்லுனராவர். எழுத்துத் துறையிலும் பேச்சுத் துறையிலும் மக்களுக்குத் தேவையானவற்றைக் கொடுப்பவரே தவிர மக்கள் விரும்புகிறவற்றைக் கொடுப்பவரல்ல. மக்கள் விரும்புகிறார்களே என்று சில பத்திரிகைகள் கீழ்த்தரமான உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. அவற்றுக்கு அணுவேனும் இடம்கொடாது, வாழ்க்கையின் முக்கிய நோக்கம் பூரணப்படுதல் ஒன்றையே கருத்தில் கொண்டு எழுத்துமூலமும் பேச்சுமூலமும் பெரும் பணி ஆற்றி வருகின்றார்கள். அவரது பேச்சிற்கு அடிமையாகித் தமது வாழ்க்கையையே முற்றாக மாற்றிக் கொண்டவர்கள் எத்தனையோ பேர்.

அறிஞர் ஒருவர் குறிப்பிட்டபடி ''ஆழ்ந்த அவரது

புலமை; அழகும் நளினமும் செறிவும் கொண்ட அவரது பேச்சு; இனம் கண்டு இலக்கியப் பரம்பரையை உருவாக்கும் அவரது ஆய்வு; சமயத் துறையில் ஊறித் திளைத்த அவரது பக்திப் பாடல்கள்'' இவை தமிழுக்கு வாய்த்த பேறுகளே ஆகும்.

எழுத்துவன்மை பேச்சுவன்மை மாத்திரமல்ல, பாடும் வன்மையும் பெற்றவர்கள்; திரு. கி. வா. ஜ. அவர்கள். நீரோட்டம் போல் வெகு லாகவமாக நூற்றுக் கணக்கான பாடல்களை ஒரே மூச்சிலே பாடி விடுவார்கள். அவரது உயர்ந்த சிறந்த கற்பனைகளுக்கெல்லாம் மூலவேர் அவரது பக்தியாகும். அவரது முருக பக்தியைக் கந்தரலங்காரச் சொற்பொழிவுகளிலே காணலாம். கந்தரலங்காரத்தில் எழுத்துக்கு எழுத்து பக்திச் சுவை சொட்டப் பேசுவார்கள். அவரது படத்தை ஆத்மஜோதியிலே வெளியிடுவதனால் ஜோதிக்கே தனிப் பெருமை உண்டு என்று கூறி அவரது தமிழ்த் தொண்டு மேலும் வளர எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு எல்லா நலன்களும் அருளப் பிரார்த்திக்கின்றோம்.

---

மலரில் தேன் இருப்பது இயற்கையே. ஒவ்வொரு மலரிலும் ஓரளவு தேன் உண்டு. ஆனால் தேனடையில் ஒரே தேனாக இருக்கிறது. இப்படியே மனிதனுடைய பேச்சில் ரசம் ஓரளவு ததும்புகிறது. இலக்கியத்திலோ ரசங்களையெல்லாம் புலவர்களாகிய வண்டுகள் தொகுத்து வைத்திருக்கிறார்கள். மலரினூடே தேன் இருப்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். மனிதன் பேச்சினூடே ரசம் இருப்பதும் தெரியவரும். இலக்கணம் இயற்றியவர்கள், உலக வழக்காகிய பேச்சுமொழியைக் கவனித்திருக்கிறார்கள். கேள்வியும் விடையும் இலக்கியங்களைக் காட்டிலும் பேச்சிலேதான் அதிகமாகப் பயில்கின்றன. ஆகவே அவற்றைப் பற்றிய இலக்கணம் வரும்போதெல்லாம் உரையாசிரியர்கள் நாம் பேசுகிற பேச்சிலிருந்து உதாரணம் எடுத்துக் காட்டுகிறார்கள்.

கி. வா. ஜ.

# கந்தர் அநுபூதி

(கி. வா. ஜ.)

முருகனுடைய பெருமையைப் பாடிய கவிவாணர்கள் முற்காலத்திலும் பிற்காலத்திலும் பலர். திருமுருகாற்றுப் படையில் தொடங்கிய அவன் புகழ் வரவரப் பெருகி வளர்ந்து வருகிறது.

முருகனைப் பாடியவர்களை இரண்டு வகையினராகப் பிரிக்கலாம். தமிழ்ப் புலமை வாய்ந்தவர்கள், முருகன் அருளைப் பெற்றவர்கள் என்று. தமிழ்ப் புலமையும் அருட் பெருக்கும் ஒருங்கே உடையவர்கள் சிலர். அவர்களுள் மிகச் சிறந்தவர் அருணகிரிநாதர். முருகனுடைய அருளனுபவத்திலே ஊறினவர் என்பதை அவருடைய திருவாக்காகிய பாடல்கள் காட்டும். அநுபவ உறைப்பிலே தலைசிறந்தவர் அருணகிரிநாதர் என்பது மாத்திரம் அன்று. அளவிலும் அவர் பாடியவை மிகுதியாக உள்ளன. அவர் பாடியவை திருப்புகழ், கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, திருவகுப்பு, மயில்விருத்தம், வேல்விருத்தம், சேவல்விருத்தம், கந்தர் அநுபூதி என்பவை. இவற்றில் திருப்புகழ் வெள்ளம் போலப் பெருகி வந்தது, அருணகிரியார் வாக்கில். பதினாறாயிரம் திருப்புகழ்ச் சந்தப்பாக்களை அவர் பாடினார் என்று வேறு புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

சந்தப்பாக்கள் பாடுவதில் அருணகிரிநாதருக்கு இணை அவரே என்று சொல்ல வேண்டும். திருப்புகழ்ப் பாக்கள் தமிழ்நாட்டில் வர வரச் சிறப்பெய்தி வருகின்றன. அருணகிரியார் இயற்றிய நூல்கள் யாவுமே முருக பக்தியை உண்டாக்கும் திறம் வாய்ந்தவை. கந்தர் அநுபூதியைப் பலரும் பாராயண நூலாகக் கொண்டு ஓதி வருகிறார்கள். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒவ்வொரு யந்திரம் அமைத்துப் பூசிக்கும் வழக்கமும் இருக்கிறது. இதனை அருணகிரிநாதர் கிளியாக இருந்து ஓதினாரென்றும், இது ஐம்பது பாடல்களை உடையதென்றும் கூறுவர்.

**'கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொற்ற**
**எந்தையருள் நாடி இருக்குநாள் எந்நாளோ!'**

- *தாயுமானவர்*

# அன்பின் உருவம் - கி. வா. ஜ.

ஆர். கே. சாரி

அறுபது ஆண்டுகள் நிரம்பப்பெறும் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், கங்கையில் புனிதமான காவேரியின் அருட்கருணையால் வளம் கொழித்துப் பூரிப்புடன் விளங்கும் திருச்சி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணராயபுரம் என்னும் திருப்பதியில் 1906 - ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ஆம் நாள் அவதரித்தார். சோழநாடு ஈன்றெடுத்த ஜகந்நாதனை கொங்குநாடு வளர்த்தது. இன்பகரமான குழந்தைப் பருவத்தில் சேலம் மாவட்டத்தில் உள்ள மோகனூரில் ஓடி விளையாடி வளர்ந்த ஜகந்நாதன், குளித்தலை உயர் நிலைப்பள்ளியில் கல்வி பயின்றார். இளைஞர் ஜகந்நாதனிடம் குடிகொண்டிருந்த அறிவுப் பசி, தமிழ் இலக்கியங்களைக் கற்றுணரவேண்டுமென்ற துடிப்பு, ஆர்வம், அவர் முற்பிறப்பில் செய்திருந்தமகத்தான நல்வினை ஆகியவை தமிழ்ப்பெரியார் டாக்டர் உ. வே. சாமிநாதய்யரிடம் அவரைக் கொண்டுசேர்த்தன. 1928 - ஆம் ஆண்டு முதல் ஐயரவர்களின்காலடிகளில் அமர்ந்து பிரதான மாணவராக இருந்துதமிழ் பயின்றார். ஐயரவர்களின் ஏடு தேடு பணி, பதிப்புப்பணி, தமிழ் இலக்கிய ஆராய்ச்சிப்பணி ஆகிய ஒவ்வொரு தமிழ்ப்பணியிலும் உறுதுணையாக இருந்து உதவும் பெரும் பேறும் பெற்றார் ஜகந்நாதன் அவர்கள். ஐயரவர்கள் தாம் பதிப்பித்த நூல்கள் பலவற்றிலும் தமது பதிப்புரையில் ''இந்நூல் பதிப்பிக்க உடன் இருந்து உதவிய மோகனூரர் தமிழ் வித்வான் சீவி. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு'' நன்றி தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

டாக்டர் ஐயரவர்களை ஆலோசனைக் குழுத் தலைவராகக் கொண்டு 1932 -ஆம் ஆண்டு திரு. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் தமிழ் இலக்கிய திங்கள் ஏடு ''கலைமகளை''த் துவங்கியவுடன், குருநாதரின் ஆசிகளுடன், அதன் துணை ஆசிரியராகச் சேர்ந்த திரு. ஜகந்நாதன் 1937-ம் ஆண்டு முதல் ''கலைமகள்'' ஆசிரியராக இருந்து சிறந்த முறையில் இலக்கியப் பணி ஆற்றி வருகிறார்.

1935-ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தின் "வித்வான்" தேர்வில் மாநிலத்தில் முதல்மையாகத் தேர்வு பெற்று, ரூ. 1000/- பரிசு பெற்ற திரு. ஜகந்நாதன் 1933 முதல் 35 வரை சென்னை பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைப் பகுதியில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டு "தமிழ்க் காவியங்கள்" என்ற ஆராய்ச்சி நூலை உருவாக்கினார். இந்த நூலின் முதல் பதிப்பு சென்னை பல்கலைக் கழகத்தின் ஆதரவில் முதன் முறையாக வெளியிடப்பட்டது.

திரு. கி. வா. ஜ. அவர்கள் இலக்கியத்துறையில் தொடாத பொருள் இல்லை — தொட்டதெல்லாம் தங்கம். சங்க இலக்கியக் காட்சிகள், சைவ திருமுறை, கந்தரலங்கார விரிவுரை, நாட்டுப் பாடல்களின் நயம், தமிழ் இலக்கியச் செல்வங்களை புதிய முறையில் அறிமுகப்படுத்தும் கட்டுரைத் திரட்டு, இலக்கியம் வளர்ந்த கதை, தமிழ்க் காப்பியங்களின் சிறப்பு, புலவர்கள் கதைகள், மன்னர்களின் சரித்திரங்கள், இலக்கண விளக்கம், கவிதைத் தொகுதி, சிறுகதைத் தொகுதிகள், பத உரைகளைத் தன்னகத்தே கொண்ட திருக்குறள் உரை வளம் இப்படி இதுவரை 120 நூல்களுக்குமேல் உருவாக்கித் தமிழ் கூறும் நல்லுலகுக்களித்துள்ளார் திரு. கி. வா. ஜ. இதுவரை இவருடைய சிறுகதைகள் 11 தொகுதிகளாக வெளியிடப் பட்டிருக்கின்றன. இவருடைய சிறுகதைத் தொகுதிகளான "அறுந்த தந்தி", "பவழ மல்லிகை" ஆகிய இரண்டும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப் பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த பல ஆண்டுகளாக திரு. ஜகந்நாதன் ஆற்றி வரும் தமிழ்த் தொண்டையும், சமயத் தொண்டையும் பாராட்டி அவர்களுக்கு அனேகவிருதுகளும், பட்டங்களும் அளிக்கப்பட்டுள்ளன. அவைகளில்:-

1. தவத்திரு. காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் அளித்த "திருமுருகாற்றுப்படை அரசு" "வாகீச கலாநிதி"

2. தவத்திரு. சிருங்ககிரி சங்கராச்சாரிய சுவாமிகள் அளித்த "தமிழ் கவிபூஷணம்"

3. தவத்திரு. தர்மபுர ஆதீனகர்த்தா அளித்த ''செந்தமிழ்ச் செல்வர்''

4. தவத்திரு. மதுரை திருஞானசம்பந்த மடாதிபதி அளித்த ''திருநெறித் தவமணி''

5. தமிழக மாநிலத் தமிழ்ச் சங்கம் அளித்த ''தமிழ்ப் பெரும் புலவர்''

முதலிய பட்டங்கள் குறிப்பிடத்தக்கன. தவிர, சென்னை பல்கலைக் கழகத்தின் ''வித்வான்''; ''எம். ஏ.'' ஆகிய பட்டங்களையும் பெற்றவர் திரு. கி. வா. ஜ.

இன்று தமிழகத்தின் சிறந்த இலக்கிய — சமயச் சொற்பொழிவாளர்களில் திரு. கி. வா. ஜ. அவர்களும் ஒருவர். குருநாதருக்கு வணக்கம் செலுத்தி விட்டுத் தமது சொற்பொழிவை திரு. கி. வா. ஜ. துவக்க ஆரம்பித்தவுடனே குழுமியிருக்கும் மக்கள் மெய்மறந்து போவார்கள். திரு. கி. வா. ஜ. அவர்கள் சென்று சொற்பொழிவாற்றாத ஊர்களே தமிழகத்தில் இல்லையென்று சொல்லிவிடலாம். வடநாட்டின் பகுதிகளில் எங்கெங்கெல்லாம் தமிழர்கள் வசிக்கிறார்களோ, எங்கெங்கெல்லாம் தமிழ்ச் சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள் பணி ஆற்றுகின்றனவோ அங்கெல்லாம் சென்று தமது பரந்த அறிவை, மேதையை மக்களுக்குப் பயன் படுத்தி வருகிறார் திரு. கி. வா. ஜ. ஏன், கடல் கடந்து பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கும் தமிழ் நாட்டின் இலக்கியத் தூதராகச் சென்று அங்குள்ள தமிழ் மக்களுக்கு தமது சொற்பொழிவுகளின் மூலம் இன்பம் கூட்டி வைத்த பெருமையும் திரு. கி. வா. ஜ. அவர்கட்கு உண்டு.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் துணைத் தலைவர்; தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர், சாகித்ய அகதமி குழு, தமிழ் இலக்கிய மொழி வளர்ச்சிக் கழகக் குழு இப்படி பல இலக்கிய அமைப்புகளில் அங்கம் வகிக்கிறார் திரு. கி. வா. ஜ.

இலக்கியத்தில் ஊறித் திளைக்கும் பேரறிஞர் கி.வா.ஜ. அவர்கள் சிறந்த முருக பக்தர்; அவர்களுடைய இல்லத்தில் அடியார்கள் திருக்கூட்டத்தையும், இலக்கிய நண்பர்களின் பெருங் கூட்டத்தையும் எப்போதும் காண முடியும். தம்முடைய மக்களுக்கெல்லாம் முருகனின் பல்வேறு நாமங்களை இட்டு அழைப்பது அவர் முருகனிடம் கொண்டுள்ள ஈடுபாட்டிற்குச்சான்று.

'கலைமகள்' ஆசிரியராகக் கடந்த கால் நூற்றுண்டுக்கு மேலாக அரும்பணியாற்றி வரும் திரு. ஜகந்நாதன், தமது பத்திரிகைமூலம்சிறந்த தமிழ்எழுத்தாளர்களையும் தலைசிறந்த இலக்கியப் படைப்புக்களையும் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அறிமுகப்படுத்தி உள்ளார். 'மணிக்கொடி' பத்திரிகை மூலம் தோன்றிய சில சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் தலைசிறந்த படைப்புக்கள் பல கலைமகள் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

இன்று முன்னணியில் நிற்கும் பெண் எழுத்தாளர்களில் பலர் கலைமகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டவர்களே. திரு. கி. வா. ஜ. அவர்கள் ஒரு உற்சாக ஊற்று. அவர் அளிக்கும் உற்சாகத்தாலும், ஊக்கத்தாலும் எண்ணற்ற இளம் தமிழ்எழுத்தாளர்கள் இன்று முன்னேறி வருகின்றனர். துரோணரைப் போன்று திரு. கி. வா. ஜ. அவர்களை நல்லாசானுகக் கொண்டு இலக்கியப் பாதையில் முன்னேறி வரும் ''ஏகலைவர்'' கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என்றுல் மிகையாகாது.

பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்து பணியாற்றும் திரு. கி. வா. ஜ. பழைய பரம்பரை வளரவும், பழமையும் புதுமையும் ஒன்றி இணையும் இலக்கியப் பரம்பரை உருவாகவும் பாடுபட்டு வருகிருர். திரு. கி. வா. ஜ. அவர்களின் தலைமகன் செல்வன் ஜ. சாமிநாதன் புதிய யுக்தியுடன் கற்பனை வளம் நிறைந்த உருவகக் கதை படைப்பதில் சிறந்து விளங்குவதை இன்றைய இலக்கிய அன்பர்கள் நன்கு அறிவார்கள்.

அறிஞர் ஒருவர் குறிப்பிட்டபடி ''ஆழ்ந்த அவரது புலமை; அழகும் நளினமும் செறிவும் கொண்ட அவரது பேச்சு; இனம் கண்டு இலக்கியப் பரம்பரையை உருவாக்

கும் அவரது ஆய்வு; சமயத் துறையில் ஊறித் திளைத்த அவரது பக்திப் பாடல்கள்'' — இவை தமிழுக்கு வாய்த்த பேறுகளே ஆகும்.

இத்தனை சிறப்பு இயல்புகள் பொருந்திய பேரறிஞர் 60 ஆண்டுகள் பலனுள்ள பணிபுரிந்து 61-ஆம் ஆண்டின் தலைவாசலில் காலடி எடுத்து வைக்கும் இத் தருணத்தில், நோய் நொடியற்று இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழ்ப்பணியும் சமயப்பணியும் புரிய ஆண்டவன் அருள்புரியும்படி வேண்டுகிறேன்.

---

# கி. வா. ஜ.வின் கருத்துக்கள்

தெய்வத்தை ''பால்வரை தெய்வம்'' என்று தொல்காப்பியர் சொல்கிறார். இன்ன உயிர் இன்னவாறு இன்ப துன்பங்களை அடைய வேண்டும் என்று ஊழ்வினைக்கு ஏற்பப் பகுத்து வரையறுக்கும் தெய்வம் என்று இதற்குப் பொருள் செய்ய வேண்டும். கடவுளுக்கு வேறு பல தொழில் இருந்தாலும் அவரவர்கள் தகுதி அறிந்து அநுபவத்தைச் சார்த்தும் தொழிலையே சிறப்பாகத் தமிழர் கருதியிருக்க வேண்டும். வேலை செய்தவனுக்குத் தக்கபடி கூலி தரும் செல்வனைப் போல் இறைவன் இருக்கிறான்.

தமிழர் தெளிவாகப் பேசத் தெரிந்தவர்கள். அவர்கள் மொழியில் சொல்லுக்குப் பஞ்சம் இல்லை. இப்போ எத்தனையோ வார்த்தைகளுக்குத் தமிழ் தெரியாமல் இடர்ப்படுகிறோமே என்று சிலர் கேட்கலாம். இந்த நாட்டிலே தோற்றிய பொருள்களுக்கும், இந்த நாட்டிலே எண்ணும் எண்ணத்துக்கும் சொல் இல்லையென்றால் அதுதான் குறைபாடே ஒழிய, இறக்குமதியான சரக்குக்குப் பேர் இல்லையே என்றால் பொருள் இறக்குமதி யாகும் போது பெயரும் இறக்குமதியாக வேண்டியதுதான்.

# ஸ்ரீ ஆண்டாள் அருள்விருந்து

(ஸ்ரீமத் ஸ்ரீ ரங்கானந்த சுவாமிகள்)

*நீளா துங்க ஸ்தனகிரி தடீ ஸுப்தம் உத்போத்யக்ரு*
*ஷ்ணம்/ பாரார்த்த்யம் ஸ்வம் ச்ருதி சதசிரஸ் ஸித்த்*
*மத்யா பயன்தீ/ ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம்*
*யா பலாத் க்ருத்ய புங்க்தே! கோதா தஸ்யை நம*
*இதமிதம் பூய ஏவாஸ்து பூய://*

*(ஸ்ரீ பராசரபட்டர்)*

அன்ன வயல் புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல் பதியம் இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற் பாமாலை, பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

*– (ஸ்ரீ உய்யக் கொண்டார்)*

மெய்யன்பர்களே!

*இவ்வாண்டு ஆடிமாதம் 5ந்தேதி, ஆடிப்பூரம் என்னும் திருநாள். இன்னிசையால் நற்பாமாலை பாடிக் கொடுத்தவளும், பூமாலை சூடிக்கொடுத்த சுடர்க் கொடியுமான ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த திருநாள். அழகான தனது குழல் மேல் சூட்டிய கலம்பக மாலையை அழகிய மணவாளனாகிய திருவரங்கப் பெருமானுக்குச் சமர்ப்பித்து மேன்மையடைந்த ஸ்ரீ ஆண்டாள்,-*

''சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்''

*என்று சங்கத் தமிழில் நமக்கு அருள் விருந்து அளித்துள்ளாள். திருமாலைப் பணிந்து, திருமாலைப் புனைந்து சாற்றி-*

*''நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன், நாரணா! என்னும் இத்தனை அல்லால்; புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப் புகழ்வான் அன்று கண்டாய், திருமாலே! உன்னுமாறு உன்னை ஒன்றும் அறியேன், ஓவாதே நமோ நாரணா!*

என்பன் என்று பணிவோடு தொண்டு செய்தும், அவனுக்குப் ''பல்லாண்டு'' பாடிய பெரியாழ்வாரின் திருமகளாய் அவதரித்த, கோதை நாச்சியார் என்ற, ஸ்ரீ ஆண்டாளின் அருள் நிறைந்த பெருவாழ்க்கைச் சரிதம் அறியாதார் இலர் எனலாம். மார்கழி மாதந்தோறும் மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவையும் ஸ்ரீ ஆண்டாளின் திருப் பாவையும் தமிழகம் எங்கும் முழங்குகின்றன. ஆகவே சைவம், வைஷ்ணவம் என்ற வேறுபாடின்றி தமிழ் மக்கள் போற்றும் இப்பாவைகள் இரண்டும் நமக்குற்ற அருள் விருந்தாகும்.

அரியும் சிவனும் ஒன்றே. சிவமும் சக்தியும் இணைபிரி யாத, பிரிக்க இயலாத ஒன்று. சக்தியின்றி சிவம் இல்லை; சிவமின்றி சக்தியுமில்லை! சக்தியே ஆண்டாளாக அரியாக மிளிர்கின்றாள்.

**'அரியலால் தேவியில்லை ''** என்பதும்
**மையரிக் கண்ணரியாளும் மாலுமோர் பாகமாகி ...** என்பதும்;
**''மண்ணினையுண்ட மாயன் தன்னையோர் பாகங்கொண்டார்;**

என்பதும் அப்பர்பெருமானது திருவாக்கு. அதுபோலவே திருமங்கை யாழ்வாரும்

**''பிணங்கள் இடுகாடு - அதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு,**
**இணங்கு திருச்சக்கரத்து எம்பெருமானார்''**

என்றும்

**''பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து ...''**

என்றும் பாடுகிறார்

ஸாமவேத ஸாரம் - எனப்படும் திருவாய்மொழி அருளிய நம்மாழ்வாரும்

''வலத்தனன் திரிபுரம் எரித்தவன், இடம்பெற'' என்ப தால் அரியின் வலப்புறத்தே இருப்பது சிவபெருமான் ஆவார். இதிலிருந்து சிவனின் இடப்பாகத்தேயுள்ள உமையே சக்தியே - திருமால் என்பது வெளிப்படை.

மேலும் பேயாழ்வார் சிவனையும் திருமாலையும் ஒன்றாகக் காணும் காக்ஷியை

''தாழ் சடையும் நீள்முடியும், ஒண் மழுவும், சக்கரமும் சூழ்அரவும் பொன் நாணும் தோன்றுமால் - சூழும், திரண்டு அருவிபாயும் திருமலைமேல் எந்தைக்கு,
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து! (63. III திருவந்தாதி)

என்று எவ்வளவு அழகாகக் கூறுகிறார்! அது போலவே திருநாவுக்கரசரும்

''நாரணன்காண், நான் முகன் காண், நால்வேதன் காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன, பூரணன் காண்
புண்ணியன் காண்...... காரணன் காண் காளத்தி
காணப்பட்ட கணநாதன் காண் அவன் என் கண்ணுள்ளானே!''

என்று பாடி கண்டு மகிழ்ந்தார்.

பேயாழ்வார் கண்ட காக்ஷி திருவேங்கடத்தில், அப்பர் பெருமான் கண்டது திருக்காளத்தியில்! இவ்விருவர் கண்ட காக்ஷிகண்ணுள்ளும் கருத்துள்ளும் ஒன்றாய் இலங்குகின்றது. எனவே சிவசக்தி போன்று - ஹரி ஹரனும் ஒன்றே. இது பற்றியே தமிழரிடையே தொன் மொழி ஒன்றுண்டு; அதாவது; ''அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயிலே மண்ணு'' என்று! இது கிராமிய இலக்கியமே யாயினும் இப்பழமொழியில் ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்து இருக்கிறதன்றோ!!

''வைஷ்ணவ ஸ்தலம்'' என்ற திருவேங்கடம் ஆழ்வார்கள் காலத்திற்கும் முன்பிருந்தே இலங்குகின்றது. ஆங்கு எழுந்தருளியுள்ள மூர்த்தியை வெங்கடேச்வரர் என்று கூறுவர். இவ்விடத்தே, திருப்புகழ் பாடிய ஸ்ரீ அருணகிரி நாதர் கண்டது முருகனையே! தனது திருப்புகழில்,

........ நாரணனார் மரு
மகனுங் குகனேபொழில் சூழ்தரு
திருவேங்கட மாமலை மேவிய பெருமாளே''

என்று புகழ்பாடுகிறார்.

அனுபூதிமான்கள் கண்களுக்கு கடவுள் அவரவர் மனப்பாங்கிற்கு ஒப்ப காக்ஷி தருகின்றார் என்பதை நாம் அறிய வேண்டும். எனவே ஸ்ரீ ஆண்டாள், தன் மனத்திற் கொப்ப நாராயணனையே வரித்தாள்.

''நாமம் ஆயிரம் ஏத்த நின்ற
நாராயணா! நரனே! உன்னை
மாமி தன்மகன் ஆகப் பெற்றால்
எமக்கு வாதை தவிருமே''

என்பதே அவளது குறிக்கோள். தன் அரிய தீவிர முயற்சியாலும், தன்நம்பிக்கையாலும், அக் குறிக்கோளை அடைந்தே வெற்றி கண்டாள். இவ்வளவும் தனது பதினைந்து ஆண்டுகளுக்குள்.

ஆத்மீய வாழ்வும், அனுபூதியும் ஆடவர்க்கே உரியது, எளியது என்று நினைக்கக் கூடாது. அது யாவர்க்கும் எளியது, உரியது என்பதை நிரூபித்த ஸ்ரீ ஆண்டாள் தனது அருள் வாழ்வு மூலம் பெண்ணுலகத்திற்கு ஈடு இணையற்ற பெருமையை நல்கி, மங்கையருக்கும் 'முன்வழிகாட்டி'யாய் இலங்குகிறாள். ஆண்டவனை அடைய, அகபுறத்துறவு இன்றியமையாதது என்பது ஆன்றோர் கொள்கை.

இளமை, அழகு ஆத்ம சாதனத்திற்கு முட்டுக்கட்டையாகும் என்ற கருத்தும் உண்டு. அவ்வாறு முட்டுக்கட்டைகளாக உள்ளவைகளையே, தனக்குரிய சாதனமாகக் கொண்டு ஆண்டாள் வெற்றி பெற்றதே அவளது திறமை. தனது அழகிய பூந்தளிர் மேனி, எழில், இளமை, குழலின் செழுமை ஆகிய இவைகளையே அவள் தன் கருவியாக்கி காதல் எனும் படகில் தன் முயற்சி என்னும் துடுப்பால், எண்ணத்திற்கும் எட்டாத கரையை அணைந்தனள். இது பெண்பாலார்க்கு ஓர் எடுத்துக்காட்டு. பூங்கொடி ஓர் கொழுகொம்பை நாடுவது போலவும், நீர்ப் பெருக்குள்ள ஆறுகடலைநோக்கிப்பாய்ந்தோடுவதுபோலவும்கற்புடையபதி விரதையானவள், தன் பதியை அடைந்து தன்னையே கொடுத்து, 'தான்' என்பதேயின்றித் தயங்காத தியாகம் செய்கிறாள். இக்குணம் பெண்களுக்கு இயற்கையான விதி. எனவே, ஆண்டாள் தன்னையே, உடல் உயிர், உள்ளம் யாவையும் கண்ணனுக்கேயிட்டாள்.

''பேசுவது ஒன்று உண்டு இங்கு; எம்பெருமான்
பெண்மையைத் தலைஉடைத்து ஆக்கும் வண்ணம்
கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்
என்னும் இப்பேறு எனக்கு அருளு கண்டாய்''
என்றே ஏங்கி ஏங்கி நின்றாள்.

கற்புடை மங்கை ஒருதரம் ஒருவனைக் காதலித்து விட்டால், அவனையன்றி வேறு எவர்க்கும் தன் உள்ளத்தைத் தரவே மாட்டாள். மங்கையின் வாழ்வில் ஒருதரம்தான் அவள் தன் இதயத்தைத் தர இயலும். அது கிட்டாதாயின், வெட்டென மறந்து யாவற்றையும் துறப்பதே கற்பின் சிறப்பு. உதாரணமாக:-

அப்பரின் தமக்கை திலகவதியார் தாம் கோரிய கலிப்பகையார், திருமணத்திற்கு முன்பே இறந்த போதிலும், வேறு ஒருவரை மணம் புரியாது தவ வாழ்க்கையைக் கைக்கொண்டார்.

காரைக்கால் புனிதவதியாரும் கூட, இனிமேல் தமக்குத் தம் கணவனின் உறவு முன்போல் அமையாது என்று தெரிந்ததும், தம் தவ வாழ்வுக்குப் பங்கம் ஏதும் வராது ''காரைக்கால் பேய் அம்மையார்'' ஆன விபரங்கள் இக் கற்பின் திறத்தாலேயே. அதுபற்றியே ஆண்டாளும், கண்ணனையன்றி வேறு எவரைப் பற்றியும் பேச இடந் தரவில்லை. பெரியாழ்வார், உலக வழக்கையொட்டி வரனை நினைந்த போது, வருகிறது ஆண்டாளின் தீவிரமான வார்த்தை!

''வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத்திரிவது ஓர் நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வது ஒப்ப,
ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப் படில்
வாழ்கில்லேன் கண்டாய்''

என்பதாக!

தன் கருத்துக்குரியானை அடைவதில் அவள் மேற்கொண்ட ஆத்மஸாதனம், விரதங்கள், பிரிந்து உழலும் துன்பம் முதலான இவைகளை அவளது திருவாய் மலர்ந்த திருமொழிகளைப் படித்தே அறியலாம்; ஆண்டாளோடு இணைந்து நாமும் அனுபவிக்கலாம். ஆண்டாளின் காதல் வெள்ளம் பாய்ந்து ஓடும் திருமொழிப் பிரவாகத்தில், உலக நடைமுறையை ஒத்த பரிபாஷைகள் கவியின்பம் துலங்க, காவியமோ அல்லது நாடகமோ என்று மிளிர்கின்றன.

ஆயினும் அவளது உள்ளத்தில், அதாவது கருத்தில் ஆழ்ந்த அகன்ற மதுரபாவமே பெருக்கெடுத்து ஓடுகின்றது. மேலாகப் பார்த்தால் அவைகளைப் புரிந்து கொள்ள இயலாது. நவீன பண்டிதர்கள், ''இது ஒரு அகப் பொருட் துறை இலக்கியம்'' என்று மாத்திரம் கூறி விடுவர். அதற்குமேல் இவர்களால் இயலாது! அவளது குறிக்கோளைச் சமூக பரிபாஷையில் துவைத்து, கவியின்பம் துலங்கக் கூறும் அழகைப் பாருங்கள்:-

''தந்தையும் தாயும் உற்றரும் நிற்கத்
தனிவழி போயினள் என்னும் சொல்லு
வந்த பின்னைப் பழிகாப்பு அரிது;
மாயவன் வந்து உருக்காட்டுகின்றான்;
கொந்தளம் ஆக்கிப் பரக்கழித்துக்
குறும்பு செய்வான் ஓர் மகனைப் பெற்ற
நந்தகோபாலன் கடைத்தலைக்கே
நள் - இருட்கண் என்னை உய்த்திடுமின்

என்று அவள் கூறும் இவ்வாக்கின் வன்மை என்னே! 'மாயவன் வந்து உருக்காட்டுகின்றான்' என்பதே அவளது அனுபூதி! அதை அடைவதே ஒவ்வொரு ஜீவனின் குறிக்கோளாகும். தனது சாதனைக் காலத்தில் அற்புத திருக்காக்ஷிகளையும், கனவுகளையும், தெய்வீகத் தொடர்புகளையும் அனுபவிக்கிறாள், ஆண்டாள். இதையே அவளும் தம்மையொத்த பெண்ணுலகுக்குக் காட்டி, அவர்களையும் பாரமார்த்திகப் பெருவாழ்விற்குத் தட்டியெழுப்புகிறாள். தமது திருப்பாவையில்:-

''நங்காய் எழுந்திராய், நாணாதாய் நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடு'' என்றும்,

''எல்லே, இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?'' என்றும்
''மனத்துக்கு இனியானைப்பாடவும் வாய்திறவாய்'' என்றும்
''இனித்தானெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்''

என்று உபநிஷத் வாக்கைப்போல்:-

''உத்திஷ்ட்டத ஜாக்ரத ப்ராப்ய வராக்
நிபோதத,'' என்று பாரமார்த்திகத்தில்

தூங்கும் அனைவரையுமே எழுப்புகின்றாள். இவளைவிட சிறந்த ஆசார்ய சீலர் யார்? என்னே பரோபகார சிந்தை!!

ஸ்ரீ மணிவாசகப் பெருமானும் ஆண்டாளும் பக்தி சாஸ்திரத்திற்குத் தலையாய இலக்கணமாய் அமைந்து உயர்ந்த இலக்கியத்தை பாவைப் பாக்கள் மூலம் தந்துள்ளனர். தனது குறிக்கோளை அடையும் சாதனையில் மூழ்கிய ஆண்டாள் நோற்ற நோன்பின் காரணமாய் உண்டானதே திருப்பாவை என்ற திவ்ய பிரபந்தம்.

திருப்பாவை ஓர் "உபநிஷத்ஸாரம்" என்பது ஆன்றோர் சித்தாந்தம். உயர்ந்த உபநிஷத் கருத்துக்களையும் உபதேசங்களையும்தன்னகத்தே கொண்டுள்ளது. வைஷ்ணவ ஆசார்யரான ஸ்ரீ மத் ராமானுஜர் திருப்பாவையைப் பாராயணம் செய்தே, "திருப்பாவை ஜீயர்" என்ற ஒரு பட்டப் பெயரைப் பெற்றார். "கவி வாதி சிங்கம்" என்று பெயர் பெற்ற ஸ்ரீமந் வேதாந்த தேசிகரும் திருப்பாவையில் ஈடுபட்டு, இதை "ஆண்டாள் உபநிஷத்" என்று போற்றுகின்றார்.

விஜய நகர சக்கரவர்த்தியான ஸ்ரீ கிருஷ்ண தேவராயரும் திருப்பாவைவயில் ஈடுபட்டவராய் தன் நூலில் ஆண்டாளை "ஆமுக்த மால்யதா என்று குறிப்பிடுகிறார். வேதாந்த தேசிகரின் "கோதா ஸ்துதி", என்ற வடமொழி கிரந்தத்தின் மூலம் வடநாடெங்கும் ஆண்டாள் பக்தியும்கொள்கையும் பரவலாயிற்று. எனவே திருப்பாவை மூலம் உணர்த்தும் அரிய உபதேசமே ஆண்டாள் நமக்களிக்கும் அருள் விருந்து.

இலௌகீய வாழ்விற்கு வேண்டியது உணவு, உடை, செல்வம் முதலானவை. இத்தோடு பாரமார்த்திகத்திற்கு வேண்டியது அகப் – புறத்தூய்மை, தெய்வபக்தி ஆத்மீய சாதனை முதலானவை. நாட்டில் மழை பொழிய, உணவு தானியங்கள் செழித்து வளர, பசுக்களும் பால் நிறைந்து கொடுக்க சமூகத்தில் செல்வம் கொழிக்கும் தானே! ஆகவே தெய்வீக வாழ்வான "'நிஸ்ரேயஸும்" மற்றைய சமூக சீர்மைகளாகிய அப்யுதயமும்" வேண்டி 3ம்பாட்டில் பிரார்த்திக்கின்றாள்:-

"ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்

தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கி பெருஞ் செந்நெல்லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்து - ஏலோர் எம்பாவாய்''

என்று.

இப்பாவையில், ''உத்தமன் பேர் பாடுவதால்'' அகத்தூய்மையும், '' நீர் ஆடுவதால்'' - புறத்தூய்மையும் கூறி; அத்தகைய பல அனுஷ்டானங்களின் பலனாக மாதம் மும்மாரி பெய்ய, நாடு செழிக்க செல்வமும் கொழிக்குமாம். மேற்கொண்டு நீங்காத செல்வம் நிறைந்து, என்றால் அதெப்படி? செல்வம் என்பது 'மாறுபடும் தன்மையது தானே? நிரந்தரமாக நிலைக்காத ஒரு செல்வத்தை 'நீங்காத செல்வம் நிறைந்து' என்றாளே அதன் பொருள் என்ன? ஆத்மீய ஸாதகன், ஒரு குடம் போல, அவனவன் தகுதிக்குத் தக்கபடிதான் எதுவும் கிட்டும். அவன் ஆன்மீக நிறைவை எய்த வேண்டில், பெரிய மஹான்களை அண்டி ஞானோபதேசம் முறைப்படி பெற்றுத்தான் உய்ய வேண்டும். ஆசார்ய சீலர்களை அணுகி, தம் பணிவிடையாலும், பணிவு அன்பு, தொண்டாலுந்தான் மஹான்களிடமிருந்து ஞானத்தை அடையவேண்டும் என்பதைக் காட்டுகிறாள். ''தேங்காதே புக்கிருந்து'' - தேங்கி பாசி படர்ந்த குட்டையைப் போலல்லாமல் தனது முன்னேற்றத்தில் நாட்ட முடையவனாய், சாதகன்; ''வள்ளல் பெரும் பசுக்கள்'' - ஞான வள்ளல்களான மஹாத்மாக்களை - ஆசார்ய சீலர்களை; ''புக்கிருந்து'' - அருகில் சென்று, ''சீர்த்த முலை பற்றி வாங்க'' பசுவைக் கறப்பது போல, ஆசார்யர்கட்கு தொண்டு செய்து அடையும் உபதேசத்தாலும் அனுக்கிரஹத்தாலும்; குடம் - ''நிறைக்கும்'' - ஞானம் நிறைய உண்டாகும். ''இங்கு, பால் ஞானத்திற்கு உவமையாகக் கூறப்பட்டது. அவ்வாறு அடைந்த பாலைப்போன்றுள்ள தூய ஆன்ம ஞானமே, நீங்காத செல்வமாக நிறைந்து நிலைத்து நிற்கும் என்று ஆண்டாள் உபதேசிக்கின்றாள்!! எனவே, ஆசார்ய தொண்டும், பக்தியும், தூய்மையும், இப்பாவையின் உபதேச விருந்தாகிறது!

பகவத் உபாசனையை மனோ - வாக் - காயம் மூலம் செய்வதால் சித்த சுத்தி உண்டாகிறது. மனம் ஒன்றை நாட, வாக்கு ஒன்றை ஓத - காயம் ஏதோகிரியை செய்வதால் சித்த சுத்தி ஏற்பட வழியில்லை. உபாசனை பந்தத்தளையை நீக்கவே செயயப்படும் சாதனம் ஆகும். எனவே,

மாமனை மன்னு வடமதுரை மைந்தனைத்..........''
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினல் பாடி, மனத்தினல் சிந்திக்க,
போயபிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசு ஆகும்''

என்பது ஸ்ரீ ஆண்டாளின் உறுதி மொழி.

''எல்லா கருமத்தளைகளும் தீயில்பட்ட தூசுபோல் ஆகும்'' என்ற இம்மொழி உபநிஷத்தின் எதிரொலியாகத் திகழ்கிறது!

''யதா ஈஷிகா தூலம் அக்னௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹ அஸ்ய ஸர்வே பாப்மான: ப்ரதூயன்தே''

''நெருப்பில் இடப்பட்ட புல்லின் ஈர்க்கு எவ்வாறு எரிந்து போகிறதோ, அவ்வாறே, உபாஸகனுடைய எல்லா பாவங்களும் எரிந்து போகின்றன என்கிறது சாந்தோக்ய உபநிஷதம்.

அவ்வாறே கீதையும், ''ஞானக்னி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே'' ''ஞானத்தீ எல்லாக் கருமத்தையும் சாம்பலாகச் செய்து விடும்'' என்கிறது. 'போயபிழையும் புகுதருவான் நின்றனவும்' ஆகிய கர்மத்தளைகள், 'தீயினில் தூசு ஆகும் - பஸ்மாத் குருதே'' என்பவை ஒன்றுக்கொன்று மொழி பெயர்ப்பு போன்று அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது!

ஆண்டாளின் குறிக்கோள் ஆண்டவனை அடைவது அவனிடமிருந்து பிரியாது இருப்பது; அவனுக்கே கைங்கர்யம் — தொண்டு செய்வது - இதைத் தவிர வேறு எதுவும் அல்ல — என்கிறாள்:

— தொடரும்

# 'படாத காலிலும் படும்'

(கி. வா. ஜ.)

இது மண்டையை உருட்டி மூளையை முடுக்கிச் செய்யும் தத்துவ ஆராய்ச்சி அல்ல. தினந்தோறும் வாழ்க்கையிலே நடக்கும் சமாசாரந்தான்; உண்மையான செய்தி; காலிருப்பவர்களும் கருத்திருப்பவர்களும் தெரிந்துகொண்ட பழைய சமாசாரந்தான். ஆனால் இதைப் பற்றித் தனியாக யோசித்ததில்லை; அதனால் இந்த விஷயம் இப்போதைக்குப் புதுமையாக இருக்கலாம்.

''பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்ற பழமொழியைப் பாட்டியும் சொல்கிறாள்; பேத்தியும் சொல்கிறாள்; தோட்டியும் சொல்கிறான்; தொண்டைமானும் சொல்கிறான். வேதாந்தியும் சொல்கிறான்; சம்சாரியும் சொல்கிறான். எல்லோருடைய வாக்கினாலும் பலகோடி நூறாயிரந் தடவை உச்சரிக்கப்பட்டு இந்தப் பழமொழி இப்போது ஒரு மந்திரத்தைப் போல வழங்கி வருகிறது. நல்ல வேளையாகப் ''பட்ட காலிலே படும்'' என்று மாத்திரம் சொன்னார்களே ஒழிய அதிலே ஒரு தானைக் கலந்து குழப்பி வைக்கவில்லை; பட்ட காலிலேதான் படும்'' என்று சொல்லியிருந்தால் அதற்கு மேலே சிந்திக்கவே இடமில்லை.

எனக்கு இங்கே ஒரு கதை ஞாபகத்துக்கு வருகிறது. பொடுதலை என்பது ஒரு பச்சிலை. அதைச் சில புண்களுக்கு வைத்துக் கட்டுவார்கள். வழுக்கைத் தலையைக் கூடப் பொடுதலை என்று சொல்லலாம், ஒரு வைத்தியர் யாரோ ஒரு மடசாம்பிராணியின் பிள்ளைக்கு வைத்தியம் பண்ணினார். அந்தப் பிள்ளைக்குக் காலில் புண். ''பொடுதலையை வைத்துக் கட்டு'' என்று வைத்தியர் உத்தரவு செய்து போய் விட்டார். அந்த மனுஷனுக்குப் பொடுதலை என்ற மூலிகை இருப்பது தெரியாது. யாரோ ஒரு வழுக்கைத் தலையுடைய சாது ஒருவர் ஊருக்கு வந்திருந்தார். அவர் தலையைப் பார்த்த உடனே அந்த மனுஷனுக்குச் சந்தோஷம் கரை கடந்து விட்டது. அவரை ஆசார உபசாரம் செய்து அழைத்து வந்து சமயம் பார்த்துப் பெரியவரை அமுக்கிப் பிடித்துத் தன் பிள்ளையின் காலோடு அவர் தலை சேரும்

படி வைத்துக் கட்டி விட்டான். பெரியவர் ஒன்றும்பண்ண முடியாமல் அந்த நோயாளிக்கு அருகிலே கிடந்தார்.

நல்ல வேளையாக அன்று மாலையே வைத்தியர் வந்தார். நோயாளியின் காலோடு பெரியவரைக் கட்டியிருந்த அலங் கோலத்தைப் பார்த்தார். ''என்ன ஐயா இது?'' என்று கேட்டார். ''உங்கள் உத்தரவுப்படியே செய்திருக்கிறேன்'' என்று பல்லை இளித்துக் கொண்டே விஷயத்தைச் சொன் ஞன். வைத்தியர், ''அட முட்டாளே! முதலில் அந்தப் பெரியவரை அவிழ்த்து விடு'' என்று கடிந்து கொண்டார். அவன் கட்டவிழ்த்து விட்டான்.

சாதுவான அந்தப் பெரியவருக்கு அப்போதுதான் விஷ யம் விளங்கியது. வைத்தியர் காலில் விழுந்து, 'மகானு பாவா, இன்று உங்களால் நான் உயிர் பிழைத்தேன்'' என்று சொன்ஞர். வைத்தியர், ''ஏதோ தெரியாமல் செய்துவிட் டான்'' என்று வருத்தக் குறிப்போடு அவரைச் சமாதா னம் செய்யலாஞர். பெரியவர், ''அதெல்லாம் இருக்கட் டும், உங்கள் திருவாக்கிஞல்தான் நான் பிழைத்தேன். நீங் கள் பொடுதலையை வைத்துக் கட்டு என்று சொன்னதால் நான் உயிர் வாழ்கிறேன். பொடுதலையை நறுக்கி வைத் துக் கட்டு என்று சொல்லியிருந்தால் என்நிலை என்ன ஆகி யிருக்குமோ, சர்வேசுவரனுக்குத்தான்தெரியும்''என்றுசொல் லிப் போய்விட்டாராம். அந்த மாதிரி பட்ட காலிலேதான் படும் என்று சொல்லாமற் போஞர்களே. அதற்காகச் சந் தோஷப்பட வேண்டும்.

தினமும் நாம் எங்கெங்கோ நடக்கிருேம். மேட்டிலும் பள்ளத்திலும், சரளைக்கல் பரப்பின பாதையிலும், தார் ரோட்டிலும் நடக்கிருேம். வாசற்படியில் ஏறுகிருேம்; புறக்கடையில் இறங்குகிருேம். அப்பொழுதெல்லாம் நம் முடைய காலில் கண் இருக்கிறதா, என்ன, ஒன்றும்படா மல் இருக்க? காலிலே காயம் பட்டுவிட்டால் மட்டும் அந் தக் கண் கெட்டுப் போய், பட்ட காலிலே பட்டுக்கொண் டேயிருக்கிறதா? யோசித்துப் பாருங்கள். நமக்குக் கால் இருக்கிறவரையில், எங்கேயாவது பட்டுக்கொண்டேதான் இருக்கும். ஆஞல் அப்படிப் படும்போதெல்லாம் நாம் அதைக் கவனிக்கிறது இல்லை. நம்முடைய மூளைவரையில் அந்தச் செய்தி எட்டுவதில்லை. எங்கேயோ ஒரு சின்னக்

கிராமத்தில் யாராவது செத்துப்போன சமாசாரத்தைப் போல ஒருவரும் அறியாமல் காலோடே போய்விடுகிறது.

ஆனால் கால் எங்கேயோ வேகமாக நடந்து இடித்துக் கொண்டு ஒரு புண்ணை வாங்கிக் கொள்கிறதென்றால், அதற்குத் தனிக் கௌரவம் வந்து விடுகிறது. அநாயாசமாய் நடக்கிறது போய் ஒய்யாரமான நடனம் செய்கிறது. நம்முடைய காலிலே பகவான் கண் வைக்காத தோஷத்தினால் காயம் பட்டு விட்டால் மற்றவர்களுக்கு என்ன வந்தது? அதற்குப் பரிகாரம் செய்வது போல எல்லோருடைய கண்களும் நம்முடைய காலிலே வந்து பதிகின்றன. சிநேகிதர்களில் ஒருவர் பாக்கியில்லாமல் காலைப் பார்த்து விடுகிறார்கள். "காலிலே என்ன காயம்?" என்று அநுதாபத்தோடு விசாரிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். நம்மைப் பற்றி, நம் உத்தியோகத்தைப் பற்றி, நமக்கு உளுத்தம் பருப்பு கிடைக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் பிறகு தான் கேட்கிறார்கள். முதல் கேள்வி காலைப் பற்றித்தான். அது மட்டுமா? "ஜாக்கிரதையாக இருங்கள் சார்; பட்ட காலிலே படும்; ஜாக்கிரதையாக இருக்க வேணும்" என்று எச்சரிக்கை வேறு செய்கிறார்கள்.

நாம் அதைக் கேட்டுக் கொண்டு சும்மா இருக்கிறோமா? யாராவது காலைப் பற்றிக் கேட்காமல் நமக்குப் பக்கத்தில் வந்து விட்டால், "சார் சார், அப்படியே நில்லுங்கள்; காலை மிதித்து விடாதீர்கள்" என்று பட்ட காலைப்பற்றி விளம்பரம் செய்கின்றோம். வாஸ்தவமாகவே அதன்மேலே ஒரு சிறு துரும்பு படட்டும், ஒரே புயல்தான். துடிதுடித்துப் போகிறோம். ஆயிரந் தடவை "பட்ட காலிலே படும்" என்ற பழமொழியை நாமும் சொல்லுகிறோம்; பிறரையும் சொல்லும்படி வைத்து விடுகிறோம்.

சில பத்திரிகைகளில் பிரமுகர்கள் உள்ளூரில் இருந்து வெளியூருக்குப் போனாலும், வெளியூரிலிருந்து உள்ளூருக்கு வந்தாலும் அதை ஒரு விசேடச் செய்தியாகப் போடுவார்கள். ஒருவர் எவ்வளவோ பணக்காரராக இருக்கலாம். படித்தவராக இருக்கலாம். முதல் வகுப்பு வண்டியிலேயே போகலாம். ஆனால் அவர் போக்குவரத்தைப் பற்றிப் பத்திரிகைக்காரருக்குக் கவலை இல்லை. ஏதாவது ஒரு பெரிய கமிட்டியில் அங்கத்தினராக வந்து விட்டால் போதும்

உடனே அவர் பிரயாண விவரம் பத்திரிகையில் இடம் பெற்று விடுகிறது. அவர் எங்கேயாவது துக்கம் விசாரிக்கப் போகலாம்; கல்யாணத்துக்குப் போகலாம். எப்படியானுல் என்ன? அவர் ஊரை விட்டுப் போவது பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு புதிய செய்தியாகி விடுகிறது.

படாத காலுக்கு வராத கௌரவம் பட்ட காலுக்கு இப்படித்தான் வருகிறது. உண்மையிலே கௌரவம், படாத காலுக்குத்தான் இருக்க வேண்டும். வாழ்க்கையில் எத்தனை விதமான துன்பங்கள் வந்தாலும் அலட்சியமாக ஏற்றுக்கொண்டு மனே தைரியத்தோடு புன்னகை பொலியும் முகமுடையவனுகி விளங்குந் தீரனையல்லவா நாம் போற்ற வேண்டும்? போகும்போதும் வரும்போதும் கல்லையும் மண்ணையும் மிதித்து மோதி, மரத்தையும் மட்டையையும் தீண்டி வேகமாக நடக்குங்காலை அந்த வீரனுக்குச் சமானமாகத் தான் சொல்ல வேண்டும். அதன்மேல் எவ்வளவோ பொருள்கள் படுகின்றன. ஆனுல் அதைப் பிரமாதப்படுத்திக் கொள்ள அதற்குத் தெரிவதில்லை.

ஆகவே, 'பட்ட காலிலே படும்'' என்ற பழமொழியோடு ''படாத காலிலும் படும்'' என்ற புதுமொழியையும் நினைத்துப் பாருங்கள். படாத காலில் பட்டால் அது நடப்பவன் நடைக்கு இடையூறு உண்டாக்குவதில்லை என்ற தத்துவத்தையும் ஆராய்ந்து பாருங்கள்.

பட்ட காலிலே படுவதை நாம் உணர்கிறேம்; படாத காலிலே படுவதை நாம் உணர்வதில்லை. பணக்காரர் வீட்டுப் பிள்ளைக்குத் தும்மல் வந்தாலும் டாக்டருக்குத் தெரிந்து விடுகிறது. ஏழைத் தொழிலாளியின் குழந்தைக்கு ஜுரம் வந்தாலும் அதன் தாய்க்கே முதலில் தெரிவதில்லை. வாழ்க்கைத் தத்துவத்தை ஒட்டித்தான் பட்டகாலும் படாத காலும் நடக்கின்றன. எனவே, ''படாத காலிலும் படுவது உண்டு'' என்று நாம் தெரிந்து கொள்வது நல்லது.

—x—

# தமிழ்ச் செல்வா, வருகவே!

(பாலபாரதி)

வையம் புகழும் அறிஞர் திரு
மகனே வருக! மாசகன்ற
தெய்வத் தமிழின் திருவுருவின்
செல்வா வருக! தேன்மணக்கும்
சைவக் கொழுந்தே! தமிழணங்கின்
தவத்தின் குவையே! தூய மணி
ஐயா! கி- வா- ஜகந் நாத
அரசே! வருக, வருகவே!! 1

ஆய கலைகள் ஆய்ந் துணர்ந்த
அறிவுக் கடலே! அமுத மணத்
தூய தமிழின் அருட் சுவையில்
சொக்கிக் கிடக்கும் கவிக் குயிலே!
ஓயாதிரவு பகல் முழுதும்
உயிராம் தமிழுக் குழைத்து வரும்
நேயா, வருக! அருள் ஞான
நிறைவே வருக, வருகவே! 2

நீறு பூத்த அழகு நுதல்!
நிலவு பூத்த திருவதனம்!
வீறு பூத்த நெஞ் சுறுதி!
வீரம் பூத்த சொல்லினிமை!
மாறு பட்டார் கருத்தை யெலாம்
மணக்கும் தமிழால் நிறைவிக்கும்
பேறு பெற்ற அருள் ஞானப்
பெரியோய்! வருக, வருகவே!! 3

கங்குல் அகற்றும் ஒளிக்கதிரே!
கருணை பொழியும் விழிச் சுடரே!
சங்கப் புலவன் - தமிழ் முருகன்
தாளை மறவாத் தவக் கொழுந்தே!
பொங்கும் சைவத் தமிழ் முழக்கம்
புவனம் அனைத்தும் இசைத்துவரும்
சிங்கத் தமிழா! தெய்வ கலைச்
செல்வா! வருக, வருகவே!! 4

# பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகளுடன் இருபது நாட்கள்

(நா. அருமைநாயகம்)

— சென்ற இதழ்த் தொடர்ச்சி —

பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள் நாயன்மார்களின் தேவாரப் பதிகங்களால் மேலும் சிறப்புற்று விளங்கும் திருத்தலங்களான திருக்கோணேஸ்வரத்திற்கும் திருக்கேதீஸ்வரத்திற்கும் சென்று சுவாமி தரிசனம் செய்தார். திருக்கேதீஸ்வரத்தில் நடந்து வருகின்ற கட்டட சிற்பத் திறன்கள் அவர் மனதைப் பெரிதும் கவர்ந்தன. அத்தகு வேலைப்பாடுகள் அதி சிறப்பாக இடம்பெறுவதற்குத் தாம் மறுதடவை இலங்கை வரும்போது நிதி வசூலுக்கான இன்னிசை நிகழ்த்த இறையருள் பாலிக்க வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டார். திருக்கோணேஸ்வரத்திலே எம் பெருமானை வீதி வலம் வந்து வணங்குகையில் ஆங்கு திருக்கோணேசர் பாடல்கள் சுற்றவர மையினால் எழுதப்பட்டிருப்பதைக் கண்ணுற்றார். அவை எல்லாம் கருங்கற்களில் பொறிக்கப்படவேண்டும்; அப்போதுதான் அது வெகு நன்றாக இருக்கும் என்றார். இலங்கையில் யாராவது அப்பணியைத் தொடங்கிச் செய்யும் பட்சத்தில் இந்தியாவிலேயுள்ள ஆதீனமொன்றிலிருந்து கணிசமான அளவு பண உதவி கிடைக்கச் செய்யத் தாம் ஆவன செய்வாரென்று கோவில் அர்ச்சகரிடம் பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள் வாக்களித்தார். ஈழத்திலேயுள்ள சைவ அன்பர்கள் சுவாமிகளின் மேற்கூறிய யோசனைகளைச் செவிமடுத்து அவரைப் பக்கபலமாக வைத்துக் கொண்டு செயல்படுவார்களாயின் நமக்கு அது இக பர சுகங்களைத் தருமென்பதில் சந்தேகமில்லை.

சுவாமிகளோடு கூடவே வந்து அவருக்குப் பக்கவாத்தியகாரர்களாக ஒத்துழைத்தவர்களைப் பற்றி இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். ஸ்ரீ. எஸ். முத்துநடேசையர், சிக்கல் ஆர். வடிவேல், திரு. எஸ். வாசுதேவராவ் மூவருமே அவர்கள். ஸ்ரீ. எஸ். முத்துநடேசையர் ஓர் அற்புதமான ஆர்மோனிய வித்துவான். அவர் அமைதியாக உட்கார்ந்து தமது கை விரல்களின் அசைவுகளினால் ஆர்

மோனியத்தில் சுர இசை எழுப்பிக் கற்பனையில் இலயித்து வாசிக்க ஆரம்பித்து விட்டால் சபையோர் மெய்மறந்திருப் பர். இவர் பல இசை மேதைகளின் குரு. மிருதங்க வித் துவான் சிக்கல் ஆர். வடிவேல் துடிப்பான இளைஞர். கடு கதி வேகத்தில் அவரது கை விரல்கள் மிருதங்க மேடை யிலே நர்த்தனம் செய்கின்றன. முக பாவமும் தாளலயக் கட்டும் ஒன்றிப் பிணைந்து பெரு விருந்தாகின்றன. திரு. எஸ். வாசுதேவராவ் தப்ளாவும் கெஞ்சிராவும் வாசிப்ப திலே சாமர்த்தியசாலி. அவர் அவ் வாத்தியக் கருவிகளி லிருந்து எழுப்பும் சுர ஓசை காற்றில் செறிந்து காதின்வழி புகுந்து நெஞ்சத்தை நிறைக்கிறது. உற்சாகமான நபர். இம் மூவரதும் மேதைத் தன்மைகள் மேலும் மேலும் பிர காசிக்கக் கதிர்காமக் கந்தன் கருணை பாலிப்பானாக.

ஆத்மஜோதி சமயப் பிரச்சார நிறுவனத்தின் அழைப் பையேற்று இலங்கை வந்த பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள் ஒரு நல்ல கருத்தைத் தெரிவித்துப் போயுள்ளார். அநாதைக் குழந்தைகளை வளர்க்கவும், அவர்களுக்குக் கல்வி கற்பிக்கவும், தகுந்த தொழில் பெறவும், வாழ்விலே உள் ளொளி பெருக்கி ஆனந்தமாய் வாழவும் தாம் இந்தியா விலே 'தீனபந்து ஆசிரமம்' நிறுவியிருப்பதைப் போன்று இலங்கையிலும் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெறவேண் டும் என்பதும் அதற்கு ஆத்மஜோதி நிறுவனத்தார் உட னடியாக ஈடுபட வேண்டும் என்பதும் அவரது சிந்தனையிற் றோன்றிய வாக்குகள். பெரியவர்களின் வாக்கு பொய்த்துப் போகாது. அவை நிறைவேறவே செய்யும். அவை தங்கு தடையின்றி நடக்க, அடிக்கடி தாம் இலங்கை வந்து நிதி யுதவிக்கான இன்னிசைக் கச்சேரிகள் நடாத்த யோசித்தி ருப்பதாகச் சொன்னதும் உற்று நோக்கற்பாலதாகும்.

பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் தாம் செய்த கச்சேரிகள் காரணமாக எல்லாரினதும் பாராட்டுதல்களைப் பெற்றார். பண முடிப்புகள் கிடைத்தன. பொன்னாடைகள் போர்த் தப்பட்டன. ஈழத்து மக்களின் அன்பு வெள்ளச் சுழலில் சிக்கித் தவித்தார் என்றுதான் சொல்லவேண்டும். அவரது பாடல்கள் பல கொண்ட தொகுப்புப் பிரசுரமொன்றினை ஆத்மஜோதி பதிப்பகத்தினர் வெளியிட்டுள்ளனர். சுவாமி களின் வரவு இலங்கையிலே உள்ள முருக பக்தர்களுக்கும் ஏனைய அன்பர்களுக்கும் மனதில் புதுத் தெம்பைத் தந்துள் ளது. அது என்றும் வளரும்; நிறைந்து வாழும்.

# ஸ்ரீ அரவிந்தரின் அதிமானச தத்துவம்

கங்காதரன் - புதுவை

அதிமானசம் என்ற உன்மை வெளிப்பட்டேயாக வேண்டு மென்பது, படைப்பின் தன்மையிலும் உலக உணர்வின் பரிணு மத்திலும், மறுப்பதற்கின்றி காணக் கிடக்கின்றது என்று ஸ்ரீ அரவிந்தரும்; இவ்வுலகில் அதிமானச சக்தியின் வெளிப்பாடு வெறும் வாக்களிப்புடன் மட்டும் நின்றுவிடவில்லை, இப்பொழுது இங்கு அது உயிருடன் இயங்குமோர் சக்தி, பிறவிக் குருடனும் தெளிவாகக் காணவல்ல ஓர் உண்மை தத்துவம் என்று ஸ்ரீ அன்னையார் அவர்களும் அருளியுள்ளார்கள். அருளொளியும் அகத்தொளியும் பெற்ற பெரியோர்கள், பெயர் புகழுக்காகவும் பிறரை திருப்திசெய்வதற்காகவும் எதையும் சொல்வதோ செய்வதோ கிடையாது. தங்களுக்கு ஆத்மானுபவத்தின் மூலம் தோன்றும் அகக்காட்சிகளையும், சத்திய தரிசனங்களையுமே உலகுக்கு அருளுகின்றனர். அவர்கள் காலத்தில் வாழும் மக்களால் அவர்கள் கூறுவதில் உள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கலாம், ஆனால் உண்மை இன்மையாகி விடாது; காலம் அதை நிரூபித்துக் காட்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

மனம் இறந்தநிலை, மனதீதநிலை தற்போதுள்ளமனம் தெய்வத்தன்மை அடைந்தநிலை, மனத்தைக் கடந்த ஆத்மஞானநிலை, இவையாவும் உயரிய ஆத்மானுபவ நிலைகளே என்றும் ஸ்ரீ அரவிந்தர் அதிமானச தத்துவம் என்று குறிப்பிடுவது இவற்றையன்று.

ஜடத்தில் உறங்கிக் கிடந்த பேருணர்வானது காலக்கிரமத்தில் மலர்ச்சியும் வளர்ச்சியு முற்று படிப்படியாக பல உணர்வு நிலைகளைக் கடந்து, உடல் உயிர், மனமாகப் பரிணமித்துள்ளது. அதே பேருணர்வானது. மீண்டும் பல உணர்வு நிலைகளைக் கடந்து அதிமானச தத்துவமாக பரிணமிக்கின்றது.

இயற்கையன்னையின் மாபெரும் வேள்வியின், மகத்தான தியாகத்தின் அயரா உழைப்பின், இடைவிடா முயற்சியின் அரும் பெரும் பயன்தான் அதிமானச தத்துவம்.

பரந்து விரிந்த ஆத்மஞானத்தின் போதத்தையும் மனதின் எல்லையிலாப் பேராற்றலையும் ஒருங்கே தன்ன கத்தே கொண்ட ஒரு உயரிய தெய்வீக உணர்வு நிலையே அதிமானசத் தத்துவமாகும்.

உலக வாழ்க்கைக்கும் ஆத்மீக வாழ்க்கைக்கும் உள்ள பெரும் பிளவை ஒழித்து சமன் வயப்படுத்த வல்ல பேரா ற்றலுடையது அதிமானச சக்தியே.

அதிமானச மென்றால் என்ன?
மனப் பிராண தேக உணர்வு நிலைகளுக்கும் சத்து சித்து ஆனந்த நிலை என்று மாமறைகள் போற்றும் பேருணர்வு நிலைகளுக்கும் இடையே உள்ள ஓர் உணர்வு நிலையே அதிமானசம்; அவசேதனத்தையும் பரிசேதனத்தையும் இணைத்துப் பிணைக்கும் பாலமதுவே, அதிமானச சக்தியின் மூலமாகத்தான் அவசேதனத்தைத் தெய்வீக ரூபாந்திரம் அடையச் செய்து இவ்வுலகில் இறைவன் திருவுள விருப்பம் நிறைவேற, சிறந்த, நடுக்களஞகவும் கருவியாகவும் இருக்க முடியும்.

உலகிற்கும் இறைவனுக்கும் சித்திற்கும் ஜடத்திற்கும் இவ்வுலக வாழ்க்கைக்கும், ஆத்மீக வாழ்க்கைக்கும் பிரிக்க முடியாத ஒரு பிணைப்பை, அத்யாத்ம ஐக்கியத்தை உண் டாக்கும் ஒரு தெய்வீக உணர்வுநிலையே அதிமானசம்.

அதிமானசம் இவ்வுலகில் இயங்கி செயல்புரியும் போது பகைமை, போராட்டம், சுயநலம், தனியுணர்வகந்தை இவற்றால் கவரப்பட்டு அல்லலுறும் தற்கால உலகம் தெய்வீக மாறுதல் அடைந்து புத்தொளியும், புத்தெழிலும் புதுமலர்ச்சியுமுடைய நவ உலகமாக மாறும், நவசமுதாயம் உதயமாகும், எங்கும் இன்பப் பண்ணின் இன்னொலி கேட்கும், மக்கள் இன்பக்களிப்பில் திளைத்து அமரானந்தராய் வாழ்வர், இம்மண்ணகம் விண்ணகமாக மாறும். மனம் குறுகியது, வரம்பிற்கு உட்பட்டது, தனியுணர் வகந் தையால் பிளவு பட்டது, சம்பவங்களைப் பிரித்து பகுத்துப் பார்ப்பது, உண்மை யறியாதது, பொய்யை மெய்யாகக் காணக்கூடியது, கற்பனை உலகில் சஞ்சரிப்பது, தெளிவாக எதிரிலுள்ளதையும் புரிந்து கொள்ள முடியாதது. ஆசாபாசச் சுழலில் அகப்பட்டு அல்லலுறுவது, தான் வேறு உலகம் வேறு

இறைவன் வேறு என்று கருதுவது, இத்தகைய இயல்புகளையுடையது. குறுகிய குறைபாடுகளையுடைய மனத்தின் உதவியைக் கொண்டு, அகண்டப் பேருலகாய், அண்ட பேரண்டங்களாய் விரிந்து இயங்கும் பேருணர்வாம் பரம் பொருளை உணர்வதெப்படி? உழக்கால் கடலை அளக்க முடியுமா? கரை காணுப் பெருவெளியாய் காணுமிடமெல்லாம் பரவிக்கிடக்கும் விண்ணைக் கஜக்கோலால் அளக்க முடியுமா? மனோநிலைக்கு மேற்பட்ட ஒரு உணர்வு நிலையின் உதவியினுல் தான், வாழ்வின் கேள்விகளுக்கு விடைகாணவும் உலகப் புதிர்களின் உண்மைகளை அறியவும், சிருஷ்டிக்குப் பின்புள்ள பேருணர்வை உணரவும், யுக யுகமாக முடிவின்றி, ஒழுங்காக இயங்கி வரும் இப் பிரபஞ்சத் தோற்றத்தின் ரகசியத்தை யறியவும் முடியும். குறுகிய சிறு மனத்தின் உதவியால் இவற்றின் உண்மைகளை யறிய முயல்வது வீண்மையேயாகும். புத்துலகக் காட்சி கண்ட வேதகால ரிஷிகள், மண்ணுலகை விண்ணுலகாக மாற்ற வல்ல அதிமானச சக்தியின் இறக்கத்தை வேண்டி ஆர்வத்தீ மேனேக்கி கொழுந்து விட்டேற பிரார்த்தனை செய்திருப்பதை வேத உபநிடத மந்திரங்களில் பல இடங்களில் தெளிவாகக் காணலாம்.

அதிமானஸ சக்தியின் ஆற்றல் அபாரமானது, அதை மனிதச் சிறு மதியால் ஊகிக்கக்கூட முடியாது; அது குறுகிய வரம்பைக்கடந்து விஸ்வ சேதனமாக விரிந்து கிடப்பது, தனியுணர் வகந்தையால் தன் இயல் நிலையை மறந்து துயர்ப்படுகுழியில் வீழ்ந்து உழலும் பாசஜீவனை அகண்டாத்மாவாக உணரச் செய்வது, பலவாகப் பிரிந்து கிடக்கும் தோற்றங்களுக் கிடையேயும், அழிந்து மறையும் பொருள்களுக்கிடையேயும், அழியாததும் பிரிவினையற்றதும் முக்காலங்களிலும் இருக்கக் கூடியதுமான நிரந்தரமான பேருணர்வை உணரச்செய்வது, ஏகத்தில் அனேகத்துவத்தையும், அனேகத்தில் ஏகத்துவத்தையும் உணர்த்துவது, நரை திரை மூப்பு சாக்காடு முதலிய துயரங்கள் நிறைந்த இவ்வுலக வாழ்வில் துயரக் கலப்பு சிறிது மில்லாத அமரானந்தத்தை அனுபவிக்கச் செய்வது.

ஆசை, அகந்தை, அறியாமை, தனியுணர்வு முதலிய கீழியல் குணங்களை மாற்றி அவசேதனத்தில் ஒளியைப் பரப்சி தெய்வீக ருபாந்திரம் அடையச்செய்வது; இதுகாறும்

உலகில் தோன்றிய அவதார புருடர்களும், அருட்கவிஞர்களும் தீர்க்கதரிசிகளும் கண்ட கனவை நினைவாக்குவது, இவ்வுலகை இறைமயமாகவும், இறையை இதுவுலகாகவும் காணச்செய்வது, இவ்வுலக இயக்கங்க ளெல்லாம் மகத்தான ஒரு காரிய சித்திக்காக இறைவன் திருவுளப்படி, இயற்கை யன்னையின் பேராற்றலினுல் ஒழுங்காக இயங்குகின்றது என்பதை உணரச் செய்வது.

வாழ்வை வெறுத்துத் துறந்து அழித்து புலனையும் மனத்தையும் வென்றடக்க மோன சமாதியில் ஆழ்ந்து பேருணர்வில் ஒன்றி இரண்டறக் கலந்து வாழ்க்கைக்கு அப்பாற்சென்று ஆத்மானந்தத்தில் திளைப்பதற்குப் பதிலாக இவ்வுலகில் சாதாரண மனிதனைப் போல் வாழ்ந்து கொண்டே அமரராய் ஆத்மபோதராய், எதற்கு மஞ்சா தீரராய் வாழச் செய்வது.

வாழ்க்கை இன்பத்தில் தோன்றி, இன்பத்திலுய்த்து, இன்பமயமான இறைவனையுணர்ந்து, அவன் அருட்பணி புரிந்து இன்புறுவதற்காக தோன்றியதே என்னும் உபநிடத மந்திரங்களின் உண்மையை நமக்கு தெளிவாக விளக்குவது அதிமானச சக்தியேயாகும். நர மனிதனை தேவ மனிதனுகவும், நரை திரை மூப்பு, சாக்காட்டால் பாதிக்கப்படும் இவ்வுடலை, எதனுலும் பாதிக்கப்படாததும், அழிவற்றதுமான அமர நிலையை அடையச் செய்வது, மரணமிலாப் பெருவாழ்வு என்று மறை புகலும் அருள்மொழியை செயலில் காட்டுவது.

அறிவு ஆற்றல் அமைதி ஆனந்தம் முதலிய தெய்வீக குணங்களை இயல்பாகவே தன்னிடத்தேயுடைய அதிமானச சக்தியின் இறக்கத்தால்தான் ஓர் மனிதன் தேவ மனிதனுக மாறுகின்றுன்.

—தொடரும்—

Registered at the G. P. O. as a Newspaper M. L. 59/300

## சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

*இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 17 ஆண்டுகள் பூர்த்தியாகி 18வது ஆண்டு ஆரம்பமாகி பதினேராவது இதழும் வெளி வந்துள்ளது. பல சந்தா நேயர் களுடைய ஆதரவினுலேயே ஜோதி மாதந் தோறும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வழக்கம்போல அன் பர்கள் அனைவரும் புத்தாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டு கின்றேம். சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றேம்.*

இந்தியாவிலுள்ள சந்தா நேயர்கள் வழக்கம் போல்

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ்,**

*அரிசிப்பாளையம்,* **சேலம் — 9.**

**என்ற விலாசத்திற்கு அனுப்பி வைப்பதோடு இவ்விடமும் அறியத்தருவீர்களாக.**

# ஆத்மஜோதி நிலையம்,
## நாவலப்பிட்டி, (சிலோன்)

*அச்சிடுவிப்போர்:-* ஆத்மஜோதி நிலையத்தினர்
*அச்சிடுவோர்:-* ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
*வெளியிட்ட திகதி:-* 17-9-66.